Judicial Form No. 53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I,

POLLACHI

| | |
|---|---|
| Calendar | |
| Miscellaneous | Case No. CC. 141 of 2013 |
| Preliminary Register | |
| Sessions | |
| | Prosecution அ.சா.1 |
| Deposition of Witnesses for | Defense |
| | Court : |
| Name | : அகமதுபாஷா |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of February 2020.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது கூத்தங்கரை, நாராயணன்நகரில் குடியிருக்கிறேன். கடந்த 16-11-2012ம் தேதி ஒரு வேலை விஷயமாக பொள்ளாச்சியில் இருந்து கோயமுத்தூருக்கு வேலைக்கு செல்வதற்காக வந்திருந்தேன். பொள்ளாச்சி பஸ்

ஸ்டாண்டில் ஒருவர் ஆபாச CD-க்களும் புதுப்பட CD-க்களும் இருப்பதாக சொன்னார். புதுப்பட CD 50 ரூபாய் என்றும், ஆபாச CD-கள் 100 ரூபாய் என்றும் சொன்னார். அவர் பெயர் முகமது அலி. ஆஜர் எதிரிதான் என்னிடம் CD-க்களை விற்பதற்காக கேட்டார். பஸ் ஸ்டாண்டுக்கு வெளியே இருந்த போலீஸ்காரரிடம் சொன்னேன். என்னை விசாரித்து கையெழுத்து வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டார்கள். நான் கொடுத்த புகார் அசாஆ **1**. சம்பவம் நடந்தவுடன் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனக்கு சொந்த ஊர் கிருஷ்ணகிரி. கிருஷ்ணகிரியில் இருந்து பொள்ளாச்சிக்கு 11-11-2012ம் தேதி காலை 9.00 மணிக்கு கிருஷ்ணகிரியில் பஸ் ஏறினேன். 4 மணி நேரத்தில் பொள்ளாச்சியை வந்தடைந்தேன். மதியம் 1.30 மணிக்கு பொள்ளாச்சி வந்தேன். பொள்ளாச்சியில் பேக்கரி கடைக்கு வேலைக்கு வந்தேன். பொள்ளாச்சி பஸ் ஸ்டாண்டில் இருந்த எல்லா ஸ்வீட் கடை மற்றும் பேக்கரியில் வேலை கேட்டேன். யாரும் எனக்கு வேலை கொடுக்கவில்லை. 1.30 மணியில் இருந்து மாலை 5.00 மணி வரை வேலை தேடினேன். 5.00 மணி வரை வேலை கிடைக்காததால் கோயமுத்தூருக்கு சென்று வேலை தேடலாம் என்று முடிவு செய்தேன். பொள்ளாச்சி பஸ் ஸ்டாண்டின் வெளியே போலீஸ்காரர்கள் இருந்தார்கள். 7.30 மணிக்கு கோயமுத்தூருக்கு செல்லும் பஸ் ஸ்டாண்டுக்கு வந்தேன். எதிரி அந்த நேரத்தில் நிறையபேருக்கு கேசட் விற்றுக்கொண்டிருந்தார். என்னிடம் கேட்கும்போது நான் கேசட் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். நான் வேலை தேடுவதை விட்டுவிட்டு போலீசிடம் இவரை பிடித்துக்கொடுக்க வேண்டும் என்று சென்றுவிட்டேன். பொள்ளாச்சி பஸ் ஸ்டாண்டில் 10 அடி தள்ளி போலீசார் நின்றுகொண்டிருந்தார்கள். 2 போலீசார்கள் சீருடையில் இருந்தார்கள். நான் சொல்லச்சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து செய்தேன். நான் தமிழிலும், ஆங்கிலத்திலும் கையெழ்துது போடுவேன். ஆனால் அன்றையதினம் தமிழில்தான் கையெழுத்துபோட்டேன். நான் அப்போதே எதிரியை அடையாளம் காண்பித்தேன். எதிரியை போலீசார்

பிடித்துக்கொண்டார்கள். நான் புகார் கொடுத்து எதிரியை போலீசார் பிடித்தது இரவு 9.00 மணியிருக்கும். கையெழுத்து வாங்கிக்கொண்டு போலீசார் என்னை அனுப்பிவிட்டார்கள். கோயமுத்தூர் கணபதிக்கு சென்றேன். எனக்கு வெங்கடேஷ்வரா பேக்கரியில் வேலை கிடைத்தது. அந்த பேக்கரிக்கு அருகே வீடியோ பைரசி செல் காவல் நிலையம் உள்ளது என்றால் இல்லை. வீடியோ பைரசி செல் காவல் நிலையம் பொள்ளாச்சி பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ளது. நான் சொல்வதுபோல் எதிரி என்னிடம் கேசட் விற்கவில்லை என்றாலும், போலீஸ் போட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்/B.தங்கமணிகணேஷ்)
நீதித்துறை நடுவர் எண்.1,
பொள்ளாச்சி.